Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வு இதழ் ISSN: 3049-0723 (Online)
A monthly peer-reviewed online multi-disciplinary Tamil journal

Volume 1, No. 08, May 2025

# இனக்குழு மக்களின் நம்பிக்கை - மகிமைப் பொருள்கள் மானிடவியல் அணுகுமுறை

# Beliefs of Ethnic Groups - Objects of Glory Anthropological Approach

**K. Vijayakumari[1], Dr. M. Prema[2]**

1. PhD Research Scholar, Postgraduate Teacher (Tamil) LNP Girls Higher Secondary School, Ilalgudi
Postgraduate Researcher, Bharathidasan University, Tiruchirappalli-02.
EMail: vijisurya277@gmail.com, Mobile : 87546 74369.

2. Research Guide, Assistant Professor, Department of Tamil Studies, Holy Cross Autonomous College,
Tiruchirappalli - 620 002
EMail:mailto:mpremasoosairaj@gmail.comailto:, Mobile No.99421 06490

**க. விஜயகுமாரி[1], முனைவர்.ம.பிரேமா[2]**

1.ஆய்வாளர், பட்டதாரி ஆசிரியை (தமிழ்), LNP பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இலால்குடி
முனைவர் பட்ட ஆய்வாளர், பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி-02.
EMail: vijisurya277@gmail.com
Mobile : 87546 74369.

2.நெறியாளர், உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 620 002
EMail:premasoosairaj@gmail.com
Mobile No.99421 06490

**Abstract:**
Through the lens of cultural anthropology, we can observe that beliefs in sacred objects, a practice traceable back to the songs and daily lives of ancient cultures, persist today with subtle adaptations. This continuation of original beliefs, expressed through reverence for specific objects, is not limited to small religious groups. It also appears in major world religions like Christianity, Islam, and Hinduism, demonstrating its enduring influence on human spirituality.

**Keywords**: cultural anthropology, Christianity, Islam, Hinduism, பண்பாட்டு மானிடவியல்

## முன்னுரை :

பண்பாட்டு மானிடவியல் அடிப்படையில் தொல் இனக்குழு மக்களின் பண்பாடுகளில் பல்வேறு நம்பிக்கைகள் பின்பற்றப்பட்டு வந்துள்ளமையும் அவற்றுள் ஒன்றாக> மகிமைப் பொருள்கள் மீதான நம்பிக்கைகள் அன்று தொடங்கி இன்று வரை தொடர்ச்சியாக சிறு சிறு வடிவமாற்றம் பெற்று பின்பற்றப்படுவதை பாடல்கள் வாயிலாகவும்> நடைமுறை வாழ்க்கையின் வழியாகவும் அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வழிபாட்டு நம்பிக்கை சிறு சமயப் பிரிவுகளில் மட்டுமல்லாது உலகின் பெரிய சமயங்களாக உருப்பெற்றுள்ள கிறித்துவம்> இஸ்லாம்> இந்து சமயம் போன்ற பெருஞ்சமயங்களில் பல்வேறு பொருட்களின் வழியாக மக்களால் நம்பப்படுகின்ற ஆதி நம்பிக்கையின் தொடர்ச்சியாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்க ஒன்று.

## பெருஞ்சமயங்களின் வெளிப்பாடு

கிறித்துவ சமயத்தின் முக்கிய மகிமைப் பொருள் வழிபாடாக 'சிலுவை' என்பது மிகவும் புனிதத்தன்மை பெற்றதாக கருதப்படுவதுடன் 'சிலுவை' அணிந்து கொள்வது என்பதும் கிறித்துவர்களின் சமய நம்பிக்கையில் சிறப்பிடம் பெற்று விளங்குகிறது.

இஸ்லாம் சமயத்தின் 'புனித நீர்' என்ற வகையின் அடிப்படையில் நீரை மந்திரங்கள் ஓதி புனிதப்படுத்தி வழிபாட்டில் பயன்படுத்துகின்றனர். மேலும் 'அடியார்களின்' சமாதிகளை (தர்க்கா) புனித யாத்திரைகள் மேற்கொண்டு வணங்கி வழிபடுவது என்பது இன்றளவும் பின்பற்றப்படும் ஒரு புனித செயலாகக் கருதப்படுகின்றது.

இந்து சமயத்தினைப் பொருத்தவரை பல பொருட்கள் மகிமைப் பொருட்கள் பட்டியலில் இடம்பெற்று வழிபடப்படுகின்றன. வேல்> சடாரி> நீர்> துளசி> சாளக்கிராமம்> உருத்திராட்சம்> தாயத்து> விபூதி> குங்குமம்> மஞ்சள்கயிறு> வேப்பிலை இன்னும் பிற பொருட்களும் வழிபாட்டு நம்பிக்கையின் அடிப்படையில் சிறப்பிடம் பெறுகின்றன.

இவ்வாறு சமயங்களில் பின்பற்றக்கூடிய மகிமைப் பொருள் வழிபாடென்பது தெய்வத்தன்மை பெற்ற பொருட்களாக மக்களால் நம்பப்படுவதுடன் இவற்றுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட ஏதோ ஓர் ஆற்றல் இருப்பதாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட பொருட்களை வணங்குவதாலும்> பாதுகாப்பதாலும் அவை ஆற்றலுடன் தங்களைப் பாதுகாத்து துன்பங்களைப் போக்கி> உடல்நலம், மனநலம் போன்றவற்றில் மகிழ்ச்சி கிடைக்க வழிவகை செய்கின்றன என்ற ஆழமான நம்பிக்கையை காலங்காலமாகக் கொண்டுள்ளனர் என்று எண்ண வேண்டியுள்ளது. இந்த நம்பிக்கையைத்தான் மானிடவியலார் "மகிமைப் பொருள் வழிபாடு" என்ற சொல்லால் விளக்க முற்பட்டுள்ளனர். (பண்டைத் தமிழ்ப் பண்பாடு - பக்தவத்சலபாரதி)

**மகிமைப் பொருள் வழிபாடு - விளக்கம் :**

மகிமைப் பொருள் வழிபாடு' என்ற சொல்லின் விளக்கத்தை 'தமிழ் மக்களின் தொல்சமயம்' என்ற தனது நூலில் ஆசிரியர் பாண்டுரங்கன் பின்வருமாறு மொழிகிறார். "Fetishism" என்னும் ஆங்கிலக் கலைச்சொல் பிரெஞ்சு மொழியில் உள்ள Fetiche என்னும் சொல்லிலிருந்து உருவாக்கப்பட்டது. இப்பிரெஞ்சு மொழிச் சொல்லும் Feitico என்ற போர்த்துகீச்சு சொல்லிலிருந்து தோன்றியது. இச்சொல் இலத்தீன் மொழிச் சொல்லான Fecticius என்னும் சொல்லிலிருந்து உருவாக்கப்பட்டது என்றும் கூறுவர். இலத்தீன் மொழியில் இச்சொல் செயற்கையானது (artificial) செய்யப்பட்டது (made) என்னும் பொருளைத் தருகின்றது. இவ்விளக்கங்களிலிருந்து Fetishism என்பது 'மீவியல் ஆற்றல்களைக்' கொண்ட சில பொருள்கள் அல்லது மனிதனால் படைக்கப்பட்ட சில பொருட்கள் மற்றவர்களின் மேல் நல்ல / தீய விளைவுகளை ஏற்படுத்தும் ஆற்றல் மிக்கவை ஆகும். Fetishism என்பது அடிப்படையில் ஒரு குழுவுக்கு உள்ளே உள்ளவர்கள்

மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய அகவய (emi) நம்பிக்கையாகும்;. அக்குழுவுக்கு வெளியில் உள்ளவர்களின் சிந்தனை புறவயமாக (etic) இருப்பதால்> அவர்கள் இவற்றை ஏற்றுக்கொள்வதில்லை (தமிழ் மக்களின் தொல் சமயம்)2 - (பக் - 355)

**தொகை நூல்களின் உள்ள சான்றுகள் :**

தொகை நூல் செய்யுள்களில் இம்மகிமைப் பொருட்கள் வழிபாடு பற்றிய சில குறிப்புகள் குறைந்த அளவில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. பொதுவாகக் கிடைக்கும் தரவுப் பாடல்களின் அடிப்படையில் மகிமைப் பொருள்கள் இரண்டாகப் பகுக்கப்படுகிறது.

**மகிமைப் பொருள்கள்**

| உயிருள்ளவை | உயிரற்றவை |
|---|---|
| காவல் மரங்கள் | ❖ வீட்டின் நிலைக்கதவு வாயில் |
| ❖ ஆலமரம்> | ❖ எருமைக்கொம்பு |
| ❖ கடம்பமரம்> | ❖ வெண்கடுகு (ஐயவி) |
| ❖ வேப்பமரம்> | ❖ கந்து (மரத்துண்டு) |
| ❖ பனை | ❖ கன்னம் (தாயத்து) |
| | ❖ காப்பு நாண் (கயிறு முதலியன) |
| | ❖ ஐம்படைத்தாலி |
| | ❖ பாவை |
| | ❖ பொதியல் ஓவியம் |

இக்கருத்திற்கு வலு சேர்க்கும் விதமாக ஆசிரியர் பக்தவத்சலபாரதி தனது ‘பண்பாட்டு மானிடவியல்’ நூலில் குறிப்பிட்டுள்ள கீழ்க்கண்ட கருத்துக்கள் கவனிக்கதக்கவை “மகிமைப் பொருள் வழிபாட்டிற்குரிய பொருள்கள் உயிருள்ளவையாகவோ> உயிரற்றவையாகவோ> இயற்கையானவையாகவோ> செயற்கையானவையாகவோ உள்ளன. பெரும்பாலான பண்பாட்டில் மண்டையோடுகள்> எலும்புகள்> செதுக்கப்பட்ட சிற்பங்கள்> விசித்திரமான கற்கள்> மரப்பொருள்கள்> கையால் வரையப்பட்ட சித்திரங்கள்> பறவையினங்களின் இறகுகள் போன்ற பலவகைப்பட்ட பொருள்கள் வழிபாட்டுப் பொருள்களாக உள்ளன. இவையனைத்தும் இயற்கை மீறிய ஆற்றல்களைக் கொண்டுள்ளன என்று மக்கள் நம்புகின்றனர். தமிழ்நாட்டில் செப்பு அல்லது இரும்பினால் செய்யப்பட்ட தாயத்துக்களைக் கட்டிக் கொள்வதும்> மந்திரித்துக் கட்டிக் கொள்ளப்படும் பிறபொருள்களும்> நரிப்பற்களை அணிவதும் மகிமைப் பொருள் வழிபாட்டின் தொடர்ச்சியே. இப்பொருள்கள் மந்திர ஆற்றல்களைக் கொண்டு உள்ளதால் இவற்றை அணிவோருக்குத் தீமைகள்

நெருங்காமல் நற்பலன்கள் ஏற்படும் என்னும் நம்பிக்கை மக்களிடம் உள்ளது. சங்க காலத்தில் ஐம்படைத்தாலி அணியும் வழக்கம் இருந்தது' - (பண்பாட்டு மானிடவியல்) - (பக்கம்-615)

**உயிருள்ள பொருள்கள் :**

மகிமைப் பொருள் வழிபாடென்பது குலக்குறியியலின் தொடர்ச்சி என்று எண்ண இடமளிக்கின்ற வகையில் காணப்படுகின்றது. தொல்குடி இன மக்கள் ஒரு சில மரங்களில் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றல் குடியிருப்பதாக எண்ணி அவற்றைத் தன் 'காவல் மரங்களாக' இனக்குழு தலைவர் காத்தனர். இக்காவல் மரங்கள் தெய்வீகத்தன்மை பொருந்தியவை என்று இனக்குழு மக்கள் நம்பியதால் பகைவர்கள் இவ் இனக்குழு தலைவனை தன் கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டி முதலில் இக்காவல் மரங்களை வெட்டிச் சாய்த்தனர். இதன் மூலம் தலைவனின் ஆற்றல் அழிக்கப்பட்டுவிட்டதாக வெற்றி பெற்றவர்கள் நம்பியதை அறியமுடிகிறது.

மரங்களில் சில தெய்வத்தன்மை பெற்றவையாக புலவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. மரங்களின் பருத்த அடியில் தெய்வங்கள் உறைவதாக அக்கால மக்கள் நம்பியதை அகநானூறில் பின்வரும் வரியில் பதிவிட்டுள்ளது.

"கடவுள் மரத்த முள்மிடை குடம்பை" (4) அகம் - 270:12 (பக்-356)

நற்றிணையாக,

"தொன்று உறை கடவுள் சேர்ந்த பராரை

மன்றப் பெண்ணை" (5) நாள்:303:3-4 (பக்-374)

என்று பண்டு தொட்டு உறைகின்ற கடவுள் தங்கப்பெற்ற பருத்த அடியையுடைய ஊர்ப் பொதுவிலுள்ள பனைமரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்" கலி 81:9 (பக்-234)

இந்து சமயக் கடவுளாகிய 'சிவபெருமான்'> 'ஆலமரத்தின்' கீழே வீற்றிருப்பதாக கலித்தொகை காட்டுகின்றது.

இம்மரங்களின் வரிசையில் சங்க காலம் முதல் தற்காலம் வரை 'வேப்பமரம்' என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. இவ்வேம்பு பாண்டிய மன்னர்களோடும் தொடர்புடையது. வேம்பின் அடியில் தெய்வம் குடியுள்ளதாக நம்பி ஆநிரைகளை கவர்ந்து கொண்டு வரும் வெட்சி மறவர்கள் தமது வெற்றிக்கு காணிக்கையாக மிக்க கொழுப்புமிக்க பசுவினை வேப்பமரத்தில் வீற்றிருந்த தெய்வத்திற்கு பலியிடுவதாகவும்

பின்பு பலியிட்ட பசுவின் குருதியினை எடுத்து மரத்தின் மீது தெளிப்பதாகவும் பசுவின் இறைச்சியினை சமைத்து அதனை அத்தெய்வத்திற்குப் படைத்து பிரசாதமாக உண்ட செய்தியினை அகநானூறு பதிவு செய்துள்ளது.

"தெய்வஞ் சேர்ந்த பராரை வேம்பின்

கொழுப்பா எறிந்து குருதி தூஉய்ப்

புலவுப் புழுக்குண்ட வான்கண்" (6) அகம் 309 : 4-6 (பக்-23)

இவ்வாறு வேம்பானது இன்றும் மாரியம்மன் வழிபாட்டில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. சில ஊர்களில் மரத்தின் மீது புடவை சார்த்தி அதனை மாரியம்மன் அல்லது காளியம்மன் என்று அம்மனாகவே கருதி வழிபாட்டினை மேற்கொள்வதும் கண்கூடு. இவையெல்லாம் சில சடங்குகளோடு தொடர்புடைய செயல்களாக காணப்படுவதன் காரணம் இயற்கையிகந்த ஓர் "மீவியல் ஆற்றல்" மரங்கள்> அவற்றின் தழைகள் போன்றவற்றில் இருப்பதாக எண்ணிய நம்பிக்கையே ஆகும் என்றால் அது மிகை இல்லை.

**உயிரற்ற மகிமைப் பொருட்கள்** :

இனக்குழு மக்களின் வழிபாட்டில் சில உயிரற்ற மகிமைப் பொருட்களும் இடம் பெற்றுள்ளன. அந்த வரிசையில் முதலில் வீட்டின் நிலைக்கதவின் வாயில் படியில் 'திருமகள்' என்று செல்வத்தின் தெய்வமாக மக்களால் நம்பப்படும் 'இலக்குமி தேவி' வீற்றிருப்பதாக சங்க காலம் முதல் சமகாலம் வரை வாயிற்கதவு நிலைப்படியானது வழிபடு பொருளாக மதிக்கப்படுகின்றது. இச்செய்திக்கு சான்றாக அமைகின்றது கலித்தொகை.

"வரிநுதல் எழில்வேழம் பூநீர்மேற் சொரிதரப்

புரிநெகிழ் தாமரை மலரங்கண் வீரெய்திந்

திருநயந் திருந்தென்ன தேய்கமழ் விறல்வெற்ப" (7) கலி 44:5-8 (பக் - 132)

என்ற அடிகளில் செழிப்புற்ற குறிஞ்சித் தலைவனின் மனையானது> எக்காலத்திலும் மலர்ந்திருக்கும் தாமரை மலர் மீது வீற்றிருக்கும் திருமகள் விரும்பும் இடமாகவும்> இருப்பதோடு> யானைகளோடு கூடிய திருமகள் வாயிலில் இருந்தால் அவ்வீட்டின் செல்வமானது கொழிக்கும் என்ற இனக்குழு மக்களின் நம்பிக்கையினை வெளிப்படுத்துகிறது.

**எருமை கொம்பு :**

ஆநிரைமேய்ப்பவர்களை அவர்கள் வளர்த்த கால்நடைகளின் அடிப்படையில் நல்லினத்தாயர்> புல்லினத்தாயர்> கோவினத்தாயர் என்றும் புலவர்கள் வகைப்படுத்தியிருந்தனர். அவ்வகையிலே எருமை மாடுகளை வளர்த்துப் பராமரித்த ஆயர்கள் தங்கள் பெண்ணிற்கு திருமணச் சடங்கு மேற்கொள்ளும் போது எருமைக் கொம்பினை நட்டு வைத்து வழிபட்டதை கலித்தொகை பின்வருமாறு காட்டுகின்றது.

"தருமணல் தாழப்பெய் தில்பூவ லூட்டி

எருமைப் பெடையோ டெமரீங் கயரும்

பெருமண மெல்லாந் தனித்தே யொழிய (8) கலித்தொகை 114:12-15 (பக்-364)

வீட்டை செம்மண்ணால் அழகுபடுத்தி வீட்டின் முற்றத்தில் வெண்மணல் பரப்பி அம்மணலில் தாங்கள் தெய்வமாக வழிபடும் பெண் எருமையின் கொம்பை நட்டு வைத்து வழிபடுகின்றனர். இச்செய்தியில் 'பெண் எருமையின்' என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் இது வளமைச் சடங்கின் ஆதாரமாக இருக்கக்கூடும். பெண் எருமையின் கொம்பினை நட்டு வழிபடுவதன் மூலமாக மணமக்களும் அனைத்து விதமான வளங்களையும் பெறுவார்கள் என்னும் நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வளமைச் சடங்கில் மகிமைப் பொருள் வழிப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கருத வாய்ப்புள்ளது.

கன்னம் (தாயத்து) :

வேலன் வெளியாடலுடன் தொடர்புடையதாக கன்னம் குறிப்பிடப்பட்டுள்ளது. கன்னம் என்பதற்கு ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் நோயைத் தணிப்பதற்குப் பண்ணிக் கொடுக்கும் மந்திரத்தகடு வைத்து கட்டிய 'தாயத்து' என்று விளக்குகின்றார். வெளியாடலுடன் தொடர்புடைய>

"பொய்யா மரபி னூர்முது வேலன்

கழங்குமெய்ப் படுத்துக் கன்னந் தூக்கி

முருகென மொழியு மாயி" (9) ஐங்குறுநூறு 1:3 (பக் - 364) வரிகளால் வேலன் கழங்குகளாலே ஆராய்ந்து கன்னத்தை கையில் தூக்கிக் கொண்டு முருகு என்று மொழிந்ததாக பொருள் தருவதன் மூலம் கன்னம் என்பது இக்காலத்தில் பயன்படுத்தப்படும் தாயத்து போன்றதொரு பொருள் என அறியமுடிகின்றது.

**காப்பு நாண் :**

இன்று தமிழக மக்கள் மேற்கொள்ளும் சுப நிகழ்ச்சிகளில் குறிப்பாக இந்து சமயத்தை சேர்ந்த பின்பற்றக்கூடிய ஒரு நம்பிக்கையாக 'காப்புக் கட்டுதல்' என்ற சடங்கானது கோவில் குடமுழுக்கு, திருமணம்> ஊர்மக்கள் மழை வேண்டி செய்யும் திருவிழாக்கள் போன்ற மங்கல நிகழ்ச்சிகளில் பரவலாக அறியப்படுகின்ற ஒன்றாகிறது. இதற்கு தொடக்கம் சங்க மக்கள் மேற்கொண்ட மகிமைப் பொருள் வழிபாட்டு நம்பிக்கையே ஆதாரமாக உள்ளது. இதனை குறுந்தொகை>

"விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்

கடனும் பூனாம் கைந்நூல் யாவாம்" (10) குறள் 218:1-2 (பக் - 390)

பிரித்து சென்ற தலைவன் நலன் வேண்டி பிரிந்திருக்கும் மகளிர் 'விறல்கெழு சூலி' (கொற்றவை) முதலிய தெய்வங்களை காப்புநூல் கட்டிக் கொண்டும் பலிக்கடன் கொடுப்பதும் வழக்கமாக இருந்துள்ளதையும் ஆனால் இப்பாடலின் தலைவி> தலைவன் பிரிவை ஓர் இமைப்பொழுதுக் கூட ஆற்றதாவளாய் அவற்றை செய்ய மறுப்பதும் செய்தியாக காட்டியுள்ளது கவனிக்கத்தக்கது.

இதனால் மனிதர்களின் கையில் கட்டிக் கொள்ளும் உயிரற்ற நூல் வழிபாட்டு நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளதையும்> தொல் இனக்குழு மக்களின் உயிரற்ற மகிமைப் பொருள் வழிபாட்டு நம்பிக்கையும்> இன்றைய அதன் படிமலர்ச்சியும் புலனாகின்றது.

**முடிவுரை :**

மனிதனைப் பற்றி அறிந்து கொள்வதில் வேறு எந்தத் துறையும் கொண்டிராத ஓர் 'கலப்புப் புல' பரப்பைக் கொண்டு மானிடவியல் விளங்குகிறது. சங்கப் பனுவல்கள் இந்நாள் வரையிலுமே இலக்கியச் சுவைக்காகவும்> புலவர்களின் அழகுணர்ச்சி வெளிப்பாட்டிற்காகவும்> வரலாற்றுப் பெட்டகமாக திகழ்வதாகவும் போற்றப்பட்டு வந்துள்ளது என்பதில் ஐயமில்லை. இப்பாடல்களைத் தந்த புலவர்கள் பண்பாட்டுப் பார்வையில் மனிதர்களின் வாழ்வியலை> மானிடவியல் அடிப்படையில் அறியும் வகையிலேயும் படைத்தளித்துள்ளனர் என்ற கருத்து கவனிக்கதக்க ஒன்றாகும். இனக்குழு மக்கள் பின்பற்றிய சடங்குகள்> அன்றைய கால மக்கள் தொடங்கி இன்றைய நவீனமய மக்கள் வரை மகிமைப் பொருள் வழிபாடு பற்றிய ஆதாரங்கள் (உயிரற்ற பொருள்கள் மற்றும் உயிருள்ள பொருள்கள்) பாடல்கள் வழி பெறப்பட்டு பண்பாட்டுத் தளத்தில் இந்நம்பிக்கைகள் பெற்றுள்ள படிமலர்ச்சி நிலையினை விளக்கும் சிறு முயற்சியாக இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளதாக இவ்வாய்ப்பு நிறைவு பெறுகிறது.

**சான்றெண் விளக்கம் :**

1. பண்டைத்தமிழ்ப் பண்பாடு - பக் 204
2. தமிழ் மக்களின் தொல்சமயம் - பக் 355
3. பண்பாட்டு மானிடவியல் - பக் 615
4. அகநானூறு - பக் 356
5. நற்றிணை - பக் 374
6. அகநானூறு - பக் 23
7. கலித்தொகை - பக் 132
8. கலித்தொகை - பக் 364
9. ஐங்குறுநூறு - பக் 364
10. குறுந்தொகை - பக் 390

## உறுத்துணை நூல்கள் :


1. எட்டுத்தொகை (அகநானூறு> நற்றிணை> கலித்தொகை> ஐங்குறுநூறு> குறுந்தொகை) திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் - சென்னை - 18 முதற்பதிப்பு - 1952 மறு அச்சு 2007> 2017
2. பண்டைத் தமிழ்ப்பண்பாடு (மானிடவியல் நோக்கில் சங்க இலக்கியம்) பக்தவசல பாரதி அடையாளம் பதிப்பகம் 1205/1 கருப்பூர் சாலை புத்தாநத்தம்> திருச்சி மாவட்டம் - 621 310 முதல் பதிப்பு 2020
3. பண்பாட்டு மானிடவியல் பக்தவசல பாரதி அடையாளம் பதிப்பகம் 1205/1 கருப்பூர் சாலை புத்தாநத்தம்> திருச்சி மாவட்டம் - 621 310 விரிவாக்கப்பட்ட புதிய பதிப்பு 2018
4. தமிழ் மக்களின் தொல்சமயம் டாக்டர்.அ.பாண்டுரங்கன் கோரல் பதிப்பகம்> எண்.8> 6-வது குறுக்குத்தெரு> 8-வது மெயின்ரோடு> வை~;ணவி நகர்> திருமுல்லைவாயில்> சென்னை - 600 109.


**References:**


1. **Ettuthogai** (Akananuru, Natrinai, Kaliththokai, Aingurunuru, Kurunthokai), Tirunelveli South India Saiva Siddhanta Works Publishing House, Chennai-18. First Edition - 1952, Reprinted - 2007 & 2017.

2. **Ancient Tamil Culture (Sangam Literature from an Anthropological Perspective)**, Bakthavasala Bharathi, Adaiyaalam Publishers, 1205/1 Karuppur Road, Puthanatham, Trichy District - 621 310. First Edition 2020.

3. **Cultural Anthropology**, Bakthavasala Bharathi, Adaiyaalam Publishers, 1205/1 Karuppur Road, Puthanatham, Trichy District - 621 310. Expanded New Edition 2018.

4. **The Ancient Religion of the Tamil People**, Dr. A. Pandurangan, Coral Publishers, No. 8, 6th Cross Street, 8th Main Road, Vaishnavi Nagar, Tirumullaivoyal, Chennai - 600 109

**License**

Copyright (c) 2025 Author

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.